# வாக்கியம் அமைத்தல்

( ஊ, ஏ சொற்கள் )

1. **ஊஞ்சல்**

கண்ணன் ஊஞ்சலில் விளையாடினான்.

2. **ஊதல்**

பேருந்து நடத்துனர் ஊதல் ஊதினார்.

3. **ஊசி**

தையல் தைக்க ஊசியும் நூலும் வேண்டும்.

4. **ஊர்வலம்**

திருவிழாவில் தேர் ஊர்வலம் நடைப்பெற்றது.

5. **ஊர்**

விடுமுறைக்கு என் சொந்த ஊருக்கு சென்றேன்.

6. **ஊதியம்**

உழைப்பிற்கு ஏற்ப ஊதியம் கிடைக்கும்.

Notebook Writer

7. ஊக்கம்

மாணவர்கள் வெற்றி பெற ஊக்கமூட்ட வேண்டும்.

8. ஊதா

வானதி ஊதா நிற ஆடை வாங்கினாள்.

9. ஊத்து

எங்கள் தோட்டத்தில் ஊத்து உள்ளது.

10. ஊறுகாய்

பாட்டி மாங்காய் ஊறுகாய் செய்தார்.

11. ஊர்வன

பாம்பு ஊர்வன இனத்தைச் சார்ந்தது.

12. ஊனமுற்றோர்

பேருந்தில் ஊனமுற்றோருக்கு தனி இருக்கை வசதி உண்டு.

Notebook writer

13. எருமை

முருகன் நான்கு எருமைகள் வளர்க்கிறான்.

14. எலும்பு

எலும்பு வளர்ச்சிக்கு கால்சியம் சத்து தேவை.

15. எண்

மாணவர்கள் எண்களை கற்றனர்.

16. எறும்பு

மாமரத்தில் எறும்பு அதிகம் இருக்கும்.

17. எலுமிச்சை

எலுமிச்சை பழம் மஞ்சள் நிறத்தில் இருக்கும்.

18. எசமான்

ஊரில் வசதி படைத்தோரை எசமான் என்று அழைப்பார்கள்.

Notebook Writer

19. எடுத்துக்காட்டு

பெற்றோர்கள் குழந்தைகளுக்கு நல்ல எடுத்துக்காட்டாக வாழ வேண்டும்.

20. எதிரி

நம் மன்னன் எதிரி நாட்டு மன்னனை வென்றான்.

Notebook Writer Notebook Writer Notebook Writer